நாள்.08.11.2022

**அசல் வழக்கு எண். 177/2020**

<u>வா.சா.2 –1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது வீட்டிற்கும் வைத்திலிங்க வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 100 மீட்டர் இருக்கும். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் மொத்தம் 7 பேர்கள் அதில் 5 ஆண்கள், 2 பெண்கள். சுப்பிரமணியன் என்பவர் எனது 3வது அண்ணன் ஆவார். அவரது மனைவி பெயர் கோவிந்தம்மாள் என்றால் சரிதான். கோவிந்தம்மாள் என்பவரின் அக்கா முத்துலெட்சுமி என்றால் சரிதான். நான்னும், எனது சகோதரர்களும் சேர்ந்து கொண்டு எனது 3– அண்ணன் சுப்பிரமணியனை கோடாரியால் வெட்டியதால் அவருக்கு இரத்த காயம் ஏற்பட்டு மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றும் நான் உடனடியாக மதுக்கூர் காவல் நிலையம் சென்று எனது 3– அண்ணன் சுப்பிரமணியன் பெயரில் புகார் கொடுத்தேன் என்று சொன்னால் பொய். மேற்படி சம்பவத்திற்கு பிறகு எனக்கும் எனது 3– அண்ணன் சுப்பிரமணியன் குடும்பத்திற்கும் பேச்சுவார்த்தி இல்லை என்று சொன்னால் சரிதான். வைத்தியலிங்கம் என்பவர் என்னை உயில் எழுதவேண்டும் என எப்போது அழைத்தார் என்றால் 31.01.2003 அன்று காலை 10.00 மணிக்கு அழைத்தார். நாங்கள் எத்தனை மணிக்கு சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றோம் என்றால் நான் மட்டும் 12 மணிக்கு மதுக்கூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேன். நான் போகும்போது அங்கு வைத்தியலிங்கம், குப்புசாமி, வைத்தியலிங்கம் மனைவி வைரகண்ணு மற்றும் சாட்சிகள் சிவலிங்கம், கிருஷ்ணமூர்த்தி, வேதரத்திணம் ஆகியோர்கள் அங்கு இருந்தார்கள். சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வைத்தியலிங்கம் காரில் காலை 10.00 மணிக்கு என்னை வந்து அழைக்க

வந்தார் ஆனால் நான் காரில் செல்லவில்லை என்ற விபரத்தை நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிததான். காரில் கஜேந்திரன் மனைவி வசந்தி வந்திருந்தார் என்றும், வைரக்கண்ணு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல வந்திருந்தார். வைத்திலிங்கம் குடும்பத்தில் பாகப்பிரிவினை செய்துகொண்ட விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது என் தந்தை சொல்லிதான் தெரியும். என் தந்தை மேற்படி பாகப்பிரிவினையில் எத்தனை பாகங்களாக பிரித்துக்கொண்டார்கள் என்ற விபரத்தை சொன்னார்களா என்றால் இல்லை. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் யாருக்கு கூடுதலாகவும், யாருக்கு குறைவாகவும் பிரித்துக்கொண்டார்கள் என்ற விபரத்தை சொன்னார்களா என்றால் இல்லை. வைத்தியலிங்கத்துடன் உடன் பிறந்தவர்கள் பெயர் என்ன என்றால் முதல் தாரத்தில் வைத்திலிங்கம், தில்லைக்கண்ணு மட்டும். வைத்திலிங்கம் தந்தைக்கு இரண்டாம் தாரம் மூலமாக தங்கராசு, அரும்பு ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். வைத்தியலிங்கத்திற்கு பாகவீதமாக கிடைத்த சொத்தை மட்டும் தான் அவரது மனைவி வைரக்கண்ணுக்கும் , அவரது தம்பி மகன் குப்புசாமிக்கும் உயில் எழுதி வைப்பதாக என்னிடம் சொன்னால் என்றால் சரிதான். வைத்தியலிங்கம் என்பவர் அவருடைய உயிலில் தில்லைக்கண்ணு, தங்கராசு மற்றும் அரும்பு ஆகியோர்களுக்கு பாகப்பிரிவினையில் பாத்தியப்பட்ட சொத்தையும் எழுதிக்கொடுதுள்ளார் என்றால் சரிதான். வைத்தியலிங்கம் என்பவர் தங்கராசுவிற்கு எழுதிக்கொடுத்த உயிலில் எந்த அடிப்படையில் எழுதிக்கொடுத்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.2 உயில் ஆவணத்தில் சுவிகார புத்திரன் என்று எழுதப்பட்டு பின்னர் அடிக்கப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

வைத்தியலிங்கம் எப்போது கையெழுத்துதான் போடுவார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.2 உயில் ஆவணத்தில் வைத்தியலிங்கம் கையெழுத்து போடவில்லை ரேகை வைத்தார். மேற்படி ஆவணத்தில் வைத்தியலிங்கம் ஏன் கையெழுத்து போடாமல் ரேகை வைத்தார் என்ற காரணம் தெரியுமா என்றால் அவருக்கு உடல் நிலை சரியில்லை அதனால் கைரேகை வைத்தார். வா.சா.2 உயில் ஆவணத்தில் அடித்தல், திருத்தல் ஆகிவைகள் என்னிடம் படித்து காண்பிக்கும்போது இருந்ததா இல்லையா என்றால் அதுப்பற்றி தெரியாது படித்து மட்டும்தான் காண்பித்தார்கள். பத்திர எழுத்தரிடம் யார் உயில் எழுதுவதற்கான விபரங்களை யார் சொன்னார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வைத்திலிங்கம் மிகவும் உடல்நிலை சரியில்லாத நேரத்தில் குப்புசாமி என்பவர் மோசடியாக எங்களை வைத்து மேற்படி உயிலை தயாரித்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி உயிலில் வைத்திலிங்கம் சுயநினைவுடன் இருந்திருந்தால் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை மட்டும் தான் எழுதிக்கொடுத்திருப்பார் என்றும், மற்றவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எழுதிகொடுத்திருக்க மாட்டார் என்றும், அடித்தல் திருத்தல் இல்லாமல் இருக்கும் என்று சொன்னால் சரியல்ல. வா,சா.ஆ 2 ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நடைமுறைக்கு வராத வா.சா.ஆ.2 ஆவணத்தை கொண்டு சொத்தை அபகரிக்க குப்புசாமிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை இல்லை**</u>

S.d/-Vadivel

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

S.d/-M.Ravichandran,B.A.,B.L.

District Munsif, Pattukkottai.